- **அனுமதி அட்டை கிடைத்ததும் உடனடியாக விண்ணப்பதாரிகளுக்குப் பகிர்ந்தளிக்க வேண்டும்.**
- **அனுமதி அட்டைகளை உடனடியாக விண்ணப்பதாரிகளுக்கு வழங்காதிருப்பதனால் ஏற்படும் அசௌகரியங்கள் தொடர்பில் அதிபரே பொறுப்புக் கூறவேண்டும்.**
- **இங்கு வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை அவர்களுக்குத் தெரியப்படுத்துவதும் கட்டாயமானது.**

**DP/GIT/2026/06**

எனது எண் : 6/10/GIT/2026
பாடசாலைப் பரீட்சைகள் ஒழுங்கமைப்பு, பெறுபேற்றுக் கிளை,
இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை, பத்தரமுல்ல.
2026.10. 14 ஆம் திகதி

சகல அதிபர்களுக்கும்,

## பொதுத் தகவல் தொழில்நுட்பப் பரீட்சை – 2026

மேற்படி பரீட்சை 2026 ஒக்ரோபர் மாதம் 24 ஆம் திகதி சனிக்கிழமை மு.ப. 9.00 மணி தொடக்கம் பி.ப. 12.10 மணிவரை நடைபெறவுள்ளது.

02. மேற்படி பரீட்சையை எழுத்துப் பரீட்சையாக நடாத்துவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளதுடன், இப்பாடத்தின் பாடத்திட்டத்தில் மாற்றங்கள் ஏதும் மேற்கொள்ளப்படவில்லை என்பதையும் அறியத்தருகின்றேன். மேலும், இப் பரீட்சையானது முன்னர் நடைபெற்றது போலவே வினாப்பத்திரம் I (பல்தேர்வு), வினாப்பத்திரம் II (விடைகளை எழுதுதல்) என இரண்டு பகுதிகளைக் கொண்டது என்பதையும் அறியத்தருகின்றேன்.

03. இப் பரீட்சைக்கு உங்களால் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பதாரிகளுக்குரிய வரவு இடாப்பும், அனுமதி அட்டைகளும் இத்துடன் உங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. பரீட்சார்த்திகளின் பெயர்களில் **எழுத்துக் குறைபாடுகள், தேசிய அடையாள அட்டை எண், பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம்** என்பவற்றை உங்கள் அலுவலகத்தில் இருக்கும் விண்ணப்பப்படிவத்தின் பாடசாலைப் பிரதியுடன் மிகவும் கவனமாக ஒப்பிட்டுப் பார்த்தல் வேண்டும்.

- ❖ அனுமதி அட்டைகளில் விண்ணப்பதாரியின் பெயர், மொழிமூலம், பால்நிலை ஆகியவற்றில் வேறுபாடுகள் இருப்பின் https://onlineexams.gov.lk என்ற இணையத்தளத்தில் School login ஐ கிளிக் செய்து பயநர் பெயர் (User name) , கடவுச்சொல் (Password) என்பவற்றைப் பயன்படுத்தி பிரவேசித்து அனுமதி அட்டையில் மாற்றங்களைச் செய்து கொள்ள வேண்டும்.
- ❖ ஒரு விண்ணப்பதாரிக்கு **ஒரு தடவை மாத்திரமே திருத்தங்களை** நிகழ்நிலையில் மேற்கொள்ள சந்தர்ப்பம் வழங்கப்படும். எனவே உரிய திருத்தங்களை சரியாக உறுதிசெய்து, நிகழ்நிலையில் ஒரே தடவையிலே செய்து கொள்ள வேண்டும்.
- ❖ எக் காரணத்திற்காகவும் பரீட்சை நிலைய மாற்றம் செய்யப்பட மாட்டாது.
- ❖ நிகழ்நிலையில் மேற்கொள்ளப்படும் சகல திருத்தங்களுக்கும் உரிய ஆவணங்களை தனித்தனியாகத் தரவிறக்கம் செய்து அச்சுப் பிரதியெடுத்து அனுமதி அட்டையுடன் இணைத்து உரிய விண்ணப்பதாரிகளுக்கு வழங்கவும்.
- ❖ திருத்தங்களை 2026.10.21 ஆம் திகதி பி.ப 04.00 மணிவரையில் மேற்கொள்ளலாம். இதற்குரிய தொழில்நுட்ப அறிவுறுத்தல்களை மேலே குறிப்பிடப்பட்டுள்ள இணையத்தளத்தில் தரவிறக்கம் செய்து கொள்ள முடியும்.

04. சில அதிபர்கள் மேற்குறித்தவாறு நிகழ்நிலையில் திருத்தங்களை மேற்கொள்ளாது, மேற்பார்வையாளர்களுக்கு மட்டும் அத் திருத்தங்களை அறிவிப்பதாக தெரியவந்துள்ளது. அவ்வாறு அதிபர்களின் அறிவித்தலுக்கமைய அத் திருத்தங்களை மேற்கொள்ளுமாறு மேற்பார்வையாளர்களுக்கு அறிவுறுத்தப்படவில்லை. பரீட்சார்த்திகளால் எந்த திருத்தங்களுக்காகவும் தனிப்பட்ட முறையில் முன்வைக்கப்படும் கோரிக்கைகள் தொடர்பில் பரீட்சைத் திணைக்களம் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளாது என்பதை அவர்களுக்கு அறிவுறுத்தவும். சகல திருத்தங்களும் உங்கள் ஊடாகவே மேற்கொள்ளப்படல் வேண்டும்.

Scanned with CamScanner

05. பாடசாலையிலிருந்து விலகியமை அல்லது வேறு காரணங்களால் அனுமதி அட்டையைப் பெற்றுக் கொள்வதற்குச் சமுகமளிக்காத பரீட்சார்த்திகளின் அனுமதி அட்டைகளை எனக்குத் திருப்பி அனுப்பாமல், பின்னர் இவ்வாறான பரீட்சார்த்திகள் வந்து அனுமதி அட்டையைக் கோரும்போது அதனை வழங்கவும். பரீட்சார்த்திக்குரிய அனுமதி அட்டை தவிர்ந்த மற்றொரு பரீட்சார்த்தியின் அனுமதி அட்டையை வழங்காதிருப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பது உங்களுடைய பொறுப்பாகும். அனுமதி அட்டையைக் கையளிக்கும் போது வரவு இடாப்பில் அதற்காக ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் அப் பரீட்சார்த்திகளின் கையொப்பங்களைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

06. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்துதல், அதிபரினால் அல்லது அதிபரின் அதிகாரம் பெற்ற பிரதி/ உப அதிபரினாலேயே செய்யப்படல் வேண்டும்.

07. ஒரே மாதிரியான பெயர்களைக் கொண்ட பரீட்சார்த்திகள் உங்கள் பாடசாலையில் இருப்பின் அவர்களுக்குரிய அனுமதி அட்டைகளை வழங்குவதற்கு முன்னர் அப்பரீட்சார்த்திகளின் முழுப்பெயர், தேசிய அடையாள அட்டை எண் என்பவற்றைப் பரிசீலனை செய்த பின் அனுமதி அட்டைகளை உரிய பரீட்சார்த்திகளுக்கு வழங்க வேண்டும்.

08. விண்ணப்பிக்கும் மொழியில் மட்டுமே விடை எழுத முடியும் என்பதையும் பரீட்சை மண்டபத்தில் மொழிமூல மாற்றம் செய்ய முடியாது என்பதையும் விண்ணப்பதாரிகளுக்கு அறிவுறுத்த வேண்டும்.

09. சகல பரீட்சார்த்திகளும் மேற்பார்வையாளர் திருப்தியுறும் விதத்தில் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளரால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை அல்லது செல்லுபடியாகும் கடவுச்சீட்டு அல்லது செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

**பரீட்சார்த்திகள் Bluetooth போன்ற இலத்திரனியல் உபகரணங்கள்/சாதனங்களைப் (Electronic Communication Devices) பயன்படுத்தாதிருப்பதை உறுதிப்படுத்துவதற்காக பரீட்சை மண்டபத்தில் பரீட்சை நடைபெறும் நேரம் முழுவதும் தமது இரு காதுகளும் திறந்தபடி தெளிவாகத் தெரியுமாறு இருத்தல் வேண்டும். அவ்வாறு பரீட்சை விதிமுறைகளுக்கு ஏற்ப செயற்படாத பரீட்சார்த்திகள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.**

10. மதிப்பீட்டு நிலையத்தில் நேர்மையீனச் செயல்களில் ஈடுபடும் பரீட்சார்த்திகளுக்கு 1968ஆம் ஆண்டு 25ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின்படி தண்டனை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமாகையால் பரீட்சை நேர்மையீனச் செயல்களில் ஈடுபட வேண்டாம் என பரீட்சார்த்திகளுக்கு அறிவுரை வழங்க வேண்டும்.

11. பெறுபேறுகளை வெளியிடும்போது அதை இணையத்தளத்திலிருந்து தரவிறக்கம் செய்து கொள்வதற்காக தத்தமது சுட்டெண், பரீட்சை நடைபெற்ற வருடம், பரீட்சை நடைபெற்ற நிலையம் ஆகியவை குறிப்பிடப்பட்ட ஒரு பகுதி அனுமதி அட்டையில் ஒதுக்கப்பட்டுள்ளது. அப்பகுதியை அனுமதி அட்டையிலிருந்து வேறாக்கி பாதுகாப்பாக வைத்துக் கொள்ளுமாறு பரீட்சார்த்திகளுக்கு அறிவுறுத்தவும்.

12. பரீட்சைப் பிரச்சினைகள் தொடர்பாக பின்வரும் தொலைபேசி எண்கள், மின்னஞ்சல் முகவரி என்பவற்றின் ஊடாக உங்களுக்குத் தேவையான தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.

**பாடசாலைப் பரீட்சைகள் ஒழுங்கமைப்பு, பெறுபேற்றுக் கிளை**

| | |
|---|---|
| தொலைபேசி எண்கள் | : 0112784208, 0112784537, 0112785211, 0112786616 |
| தொலைநகல் எண் | : 0112784422 |
| மின்னஞ்சல் முகவரி | : gitexam24@gmail.com |

**நிகழ்நிலை அலகு**

| | |
|---|---|
| தொலைபேசி எண் | : 0113661122 |

**இப் பணியை வெற்றிகரமாக நிறைவேற்றிக் கொள்வதற்கு நீங்கள் வழங்கும் ஒத்துழைப்புக்களைப் பெரிதும் மதிக்கின்றேன்.**

ஏ.கே.எஸ். இந்திகா குமாரி லியனகே
பரீட்சை ஆணையாளர் நாயகம்

D:New Volume-A 2026 Git Prm DP-GIT-2026-06.docp

Scanned with CamScanner